# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**OS.No.5/2022**

DW2–பரமசிவம் நாள்.13.03.2026

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என்தரப்பில் எதிர்வழக்குரை தயார் தாக்கல் செய்யும் போது வி.களத்தூர் கிராம சர்வேஎண்கள்.98/3ல் மொத்தம் 60 செண்டில் 30 செண்ட் முத்துசாமிக்கு பாத்தியம் என்றும், மீதியுள்ள 30 செண்ட் ஆறுமுகத்திற்கு பாத்தியம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வேஎண்.98/8, 98/9 நிலங்கள் முழுவதும் ஆறுமுகத்திற்கு தான் பாத்தியம் என்றும், அதை வாதிகள் அனுபவித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நிலத்தை நான் தானசெட்டில்மெண்டாக என்மனைவிக்கு எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சித்தப்பா அய்யம்பெருமாள் நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தை தான் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா 5,6, 7 அயிட்ட சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியம் என்று நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான்வேண்டுமென்றே மேற்படி சொத்துக்களை வில்லங்கம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2020ம் ஆண்டு மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்தேன். என்மனைவிக்கு தானம் எழுதிகொடுத்த சொத்தை பொறுத்து மீண்டும் நான் கிரய ஆவணம் எழுதிவாங்கினேன் என்றால் சரிதான். நான் வாதிகளின் சொத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வி.களத்தூர் கிராம சர்வேஎண்.88/2ல் 5ஏக்கர் 50 செண்ட் என்அப்பாவிற்கு அரசாங்கத்தால் அடமானமாக கொடுக்கப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 5ஏக்கர் 50 செண்ட் பூர்விக சொத்துக்கள் என்றால் சரியல்ல. என்அம்மா சிந்தாமணி சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் 1970ம் ஆண்டு கிரயம் வாங்கியுள்ளார். என்அம்மா கிரயம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. நான் அடமானம் என்று கூறும் சொத்தை வாதிகளும் சேர்ந்த குடும்பத்தில் என்அப்பா கர்த்தாவாக இருந்து அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. என்அப்பா, சித்தப்பா மற்றும் ஆறுமுகத்திற்கு எவ்வளவு நிலங்கள் பிரித்து கொள்ளப்பட்டது என்றால் ஆளுக்கு 2ஏக்கர் பிரித்துகொண்டார்கள். மொத்தம் நிலங்கள் சுமார் 20 ஏக்கர் என்றும், நான் வழக்கிற்காக ஆளுக்கு 2 ஏக்கர் பிரித்து கொண்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 8ஏக்கர் 98 செண்ட் எப்படி எனக்கு கிடைத்தது என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்கனவே பாகம் ஆகிவிட்டதாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.